# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 23 வியாழக்கிழமை 10.08.2023 கதிர் 47



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்




# பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு தடை!

கொழும்பில் இன்று ஆரம்பிக்கப்பட விருந்த பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியைத் தடுக்கும் வகையில் கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவின்படி, அதன் ஒருங்கிணைப்பாளர் விதானகே மதுஷான் சந்திரஜித் உட்பட 9 பல்கலைக் கழக மாணவர் சம்மேளன உறுப்பினர்களுக்கு எதிராக, ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமர் அலுவலகம், காலி முகத்திடல் மற்றும் அருகிலுள்ள பல இடங்களுக்குள்நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. 2

# குருந்தூர்மலை பொங்கல் நிகழ்வை ஜனாதிபதி உடனே நிறுத்த வேண்டும்

## நீதிமன்றோடு முட்டும் சரத் வீரசேகர



முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில், இந்த நிகழ்வை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும் என ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வலியுறுத்தல் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை 2

# கெஹலியவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் ஒத்திவைப்பு!

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் அல்லது அடுத்த மாதத் தொடக்கத்தில் விவாதிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக, கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கான திகதியினை சபாநாயகரே வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை இந்த வாரத்தில் விவாதிப்பதற்கு அனுமதி வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் பெருந்தோட்டத்துறை தொடர்பான விவாதம் 2

# வாழைச்சேனை காணி அபகரிப்பு வெளியேறுவதற்கு கால அவகாசம்

வாழைச்சேனை நாவலடி பகுதியில் சட்டவிரோத காணி அபகரிப்பில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு பொலிஸார் இரண்டு நாட்கள் கால அவகாசம் வழங்கியுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக சிலர் சட்டவிரோதமாக நுழைந்து காட்டு மரங்களை வெட்டி கம்பி வேலிகளை அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுவந்தனர்.

இந்த நிலையில் இக்காணி அபகரிப்பு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டு, காணி அபகரிப்பில் ஈடுபட்டவர்களை 2

# பெற்றோல் விநியோகத்தில் சிக்கல் ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சி!

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர



கடந்த மாத காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 69,000 மில்லியன் ரூபா இலாபம் கிடைத்துள்ளதாக வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2015 ஆம் 2

# பல்கலையில் போலி ஆவணம் தயாரித்து 70 இலட்சம் மோசடி!

பேராதனைப் பல்கலைக் கழக கலைப்பீடத்தில் பணியாற்றியபோது உயிரிழந்த பேராசிரியை ஒருவருக்கு சொந்தமான சுமார் 70 இலட்சம் ரூபா பணத்தை, போலி ஆவணங்களைத் தயாரித்து பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் அவரது கணவருக்கு வழங்கிய சம்பவத்தை கணக்காய்வாளர் நாயகம் அம்பலப்படுத்தியுள்ளார்.

நேற்று புதன்கிழமை கணக்காய்வாளர் நாயகம் அந்தப் பல்கலைக்கழக நிர்வாகத்தை கோப் குழுவின் முன் அழைத்தபோது இது வெளிப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற இச்சம்பவம் 2

# பெருந்தோட்ட மக்களின் குறைகளை ஆராய விசேட ஆணைக்குழுவை அமைக்கவேண்டும்!

## நாடாளுமன்றில் சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



மலையக பெருந்தோட்ட மக்களின் குறைகள் தொடர்பாக ஆராய விசேட ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இன்று நடைபெற்ற பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 2



# மீரிகம ரயில் விபத்து விசாரணை ஆவணங்களை பொலிஸ் தலைமையகத்தில் சமர்ப்பிக்க உத்தரவு

மீரிகம வில்வத்தையில் இடம்பெற்ற ரயில் விபத்து தொடர்பான எதிர்கால சட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிப்பதற்காக எதிர்வரும் 10 ஆம் திகதி 2


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# இலங்கையிலிருந்து வெளிவரும் மாலை செய்தி இதழ்

## 2023 பொதுநலவாயப் போட்டி இலங்கைக்கு பதக்கங்கள்!

கரீபியன் தீவுகளில் இடம்பெற்று வரும் 2023 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில், இலங்கையின் அயோமால் அகலங்க வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் இந்த வெள்ளிப்பதக்கத்தை அவர் பெற்றுள்ளார். அவர் போட்டித்தூரத்தை 51.61 விநாடிகளில் நிறைவு செய்துள்ளார்.

இந்தப் போட்டியில் ஜமேய்க்காவில் டானியல் அன்ரனி போட்டித் தூரத்தை 51.51 விநாடிகளில் நிறைவு செய்து, தங்கம் வென்றார்.

ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில், 2 மீற்றர் உயரத்தை எட்டி இலங்கையின் நிலுபுல் பெஸேர வெண்கலப்பதக்கத்தை வென்றார். (கோ)

## ஜப்பான் அரசாங்க நிதி உதவியில் யாழ் விவசாயிகளுக்கு இலவச உரம்



ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக யாழ் மாவட்டத்தில் சிறிய அளவில் நெற் பயிற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான இலவச யூரியா உரம் இன்று வழங்கிவைக்கப்பட்டது.

யாழ் சாவகச்சேரி கமநல சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிஸுகோஷி ஹிடோகி, வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாயம் அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி விஜேந்திர சரண், யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களப் பிரதி ஆணையாளர் பிரண வன் தெய்வநாயகி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இதன்போது சாவகச்சேரி கமல சேவைகள் திணைக்களத்துக்குட்பட் 2777 சிறிய விவசாயிகளுக்கு 25 கிலோகிராம் நிறை கொண்ட 3774 யூரியா உரப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, யாழ் மாவட்டத்திற்கு வழங்கவென 25 கிலோ கிராம் கொண்ட மொத்தம் 19,973 யூரியாப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## வறட்சி காரணமாக நீர் விநியோகத் தடை!

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக பல பிரதேசங்களுக்கு நீர் விநியோகத்தில் தடைகள் ஏற்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

குருநாகல், அக்கரைப்பற்று, பண்டாரவளை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் நீர் மட்டம் மிகவும் குறைவாகவே காணப்படுவதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதிகளுக்கு அப்படியே தண்ணீர் திறந்து விடப்படும் என்றும், இருப்பினும், எதிர்காலத்தில் நீர் கொள்ளளவு குறைந்தால், தண்ணீர் வழங்க முடியாத நிலை ஏற்படும் எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக வாரம் ஒருமுறை நீர் மட்டம் கண்காணிக்கப்படுவதாகவும், தண்ணீரை சிக்கன-மாகப் பயன்படுத்துமாறும் தேசிய நீர் வழங்கல் சபை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (கோ)

## மீரிகம ரயில் விபத்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் தலைமையகத்தில் விசாரணைகள் அடங்கிய ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு, மீரிகம பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

விபத்தை ஏற்படுத்திய கனரக வாகனத்தின் சாரதி, கனரக வாகனத்துக்கு இடையூறாக முன்னால் வந்த லொறியின் சாரதி, ரயில் கடவைக் காவலர் ஆகியோரிடம் இது தொடர்பாகப் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

ரயில் விபத்தைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டதா? என்பதையும், விபத்துக்கு காரணமானவர்கள் யார் என்பது குறித்தும், உரிய ஆவணங்கள் சட்டப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்டுத் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (கோ)

## பெருந்தோட்ட மக்களின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைகளைக் கேட்டறிந்து கொள்ள விசேட ஆணைக் குழுவொன்றை ஸ்தாபிக்க வேண்டும். இந்த ஆணைக் குழுவில் முன்வைக்கப்படும் யோசனைகளை உடனடியாக நிறைவேற்ற ஜனாதிபதி செயலயணியொன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவ்வாறு மேற்கொள்ளும்போது, அம்மக்களின் உரிமைகளை குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் வழங்குவதற்கு ஒரு விரைவான வாய்ப்புக் கிடைக்கும்.

பெருந்தோட்ட மக்களை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வலுப்படுத்த வேண்டும். எனினும், இதனை மேற்கொள்ள இந்த அரசாங்கத்தினால் முடியுமா எனத் தெரியவில்லை.

எதிர்காலத்தில் நாம் அமைக்கவுள்ள அரசாங்கத்தில் இந்தச் செயற்பாட்டை நிச்சயமாக மேற்கொள்வோம், எனவும் அவர் தெரிவித்தார்.

## வாழைச்சேனை காணி அபகரிப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட ரீதியாக அரசாங்கத்திடம் இருந்து காணியைப் பெறுமாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

இக்காணி அபகரிப்புத் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையையடுத்து நேற்றைய தினம் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தலைமையிலான பொலிஸார் சென்று காணி அபகரிப்பில் ஈடுபடுபவர்களிடம் குறித்த பகுதியை விட்டு வெளியேறுவதற்கு 2 நாட்கள் அவகாசம் வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர். (க)

## பல்கலையில் போலி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போலி ஆவணங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட மோசடி எனத் தெரிவித்த கணக்காய்வாளர் நாயகம், இது தொடர்பாக இதுவரையில் ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை? என பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் இவ்வாறான சம்பவங்களை நிறுத்துவதற்கு நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோப் குழு வலியுறுத்தியுள்ளது. (கோ)

## பெற்றோல் விநியோகத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் நிதியியல் ரீதியில் இலாபத்தையும் நட்டத்தையும் சந்தித்துள்ளதாகவும் 2015 ஆம் ஆண்டு 20,520 மில்லியன் ரூபா நட்டத்தையும், 2016 ஆம் ஆண்டு 53,027 மில்லியன் ரூபா இலாபத்தையும், 2017 ஆம் ஆண்டு 1,055 மில்லியன் ரூபா இலாபத்தையும் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், 2023 ஆம் ஆண்டுக்காக கூட்டுத் தாபனத்தின் சேவையாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் ஏதும் வழங்கப்படவில்லை. மாறாக 4.2 சதவீத வட்டி என்ற அடிப்படையில் புத்தாண்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பெற்றோலிய விநியோகத்தை நெருக்கடிக்கு உள்ளாக்க ஒரு தரப்பினர் ஆரம்பத்தில் இருந்து முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள். இவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார். (த)

## கெஹலியவுக்கு எதிரான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறுவதால், அதற்கே பிரதான முக்கியத்துவத்தை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எனவே, இந்தத் தீர்மானத்தை ஐக்கிய மக்கள் சக்தி எடுத்துள்ளதாக, அதன் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (மி)

## குருந்தூர்மலை பொங்கல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொருளாதார வீழ்ச்சிக்கு நாம் முகம் கொடுத்துள்ள நிலையில், இதனைப் பயன்படுத்தி தமிழ் அரசியல்வாதிகள் பிரிவினைக்கு முற்படுகிறார்கள் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

குருந்தூர்மலை என்பது வடக்கிலுள்ள பௌத்த மத்தியஸ்தலம். இதனை புராதனச் சின்னமாக அடையாளப்படுத்த நடவடிக்கை எடுத்தபோது, தமிழ் அடிப்படைவாதிகள் இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார்கள். முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி அதற்கிணங்க, அந்தச் செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளார்.

இந்நிலையில், சில குண்டர்கள் அங்கு நுழைந்து புராதன சின்னத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்பட்டுள்ளார்கள். அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் பல கோவில்கள் உள்ளன. பௌத்தர்களும் அங்கு சென்று வழிபடுகிறார்கள். எனினும், எந்தவொரு கோவிலுக்கும் சென்று புத்தர் சிலையை வைத்து, பிரித் ஓதி பௌத்தர்கள் வழிபடுவதில்லை. ஆனால், முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் பொங் கல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிபதி அனு மதி வழங்கியுள்ளார். இந்து அடிப்படைவாதிகளுக்கு நீதிபதி இவ்வாறு தொடர்ந்தும் அனுமதி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

விகாராதிபதியையும் நீதிமன்றுக்கு அழைக்காமல் தான் இவ்வாறான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இது பௌத்தர்களின் மனங்களை புண்படுத்தும் செயற்பாடு, என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் நாம், இனவாத மதவாதப் பிரச்சினைகளுக்கு காரணமா? பௌத்த வழிபாட்டு ஸ்தலம் ஒன்றில் பொங்கல் நிகழ்வை நடத்த அனுமதி வழங்கிய நீதிபதியா காரணம்? என கேட்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாடு தொடர்பாக அவதானம் செலுத்தி, உடனடியாக இந்த நிகழ்வை நிறுத்த வேண்டும், என ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளிடம் தான் கேட்டுக்கொள்வதாகவும், வடக்கில், பௌத்த சின்னங்களை அழிக்கும் பல செய்பாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

காணி அதிகாரம் இல்லாமலேயே இவ்வாறு இடம்பெறுகிறது என்றால், காணி அதிகாரம் கிடைத்துவிட்டால் எப்படி இருக்கும்? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். பௌத்தச் சின்னங்கள் பௌத்தர்களுக்கு மட்டுமன்றி, நாட்டிலுள்ள அனைவருக்கும் உரித்தானவை என நினைக்காத அடிப்படைவாத அரசியல்வாதிகள் இருக்கும்வரை, 13 தொடர்பாக தாம் பேசக்கூடத் தயா ரில்லை எனவும் அவர் உறுதிபடத் தெரிவித்தார். (க)

## பல்கலைக்கழக ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டக்காரர்களுக்குத் தடை விதித்த நீதவான், கடமையில் ஈடுபட்டிருக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படாத அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுமாறும் உத்தரவிட்டார்.

கொழும்பு கோட்டை பொலிஸ் அதிகாரிகளிடம் எழுத்து மூலம் கையளிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவில், இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவை மீறும் போராட்டக்காரர்களைக் கைது செய்வதற்குப் பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது என்றும் நீதிவான் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான போராட்டங்களினால் பொதுமக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் தொடர்பாகப் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்தை கலைக்க கிருலப்பனையில் பகுதியில் வைத்து பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். (மி)

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
**maalaikkathir@gmail.com**

# நல்லூர்த் திருவிழாக் கொடிச்சீலை வடிவமைப்பு இன்று காலை காளாஞ்சி கையளிக்கப்பட்டது





வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை கல்வியங்காட்டில் இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி ஒற்றைத் திருக்கை மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## அம்பாறையில் இளைஞர், யுவதிகளுக்கு முதலுதவிப் பயிற்சிப் பட்டறை



(நூருல் ஹுதா உமர்)

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீலங்கா மற்றும் வைஎம்எம்ஏ மாவடிப்பள்ளிக் கிளையின் ஏற்பாட்டிலும் டைடன் ஆசியன் கல்வி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பிலும் சென்ஜோன்ஸ் அம்பாறை மாவட்ட காரியாலயத்தில் இளைஞர் யுவதிகளுக்கு முதலுதவிப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளரும், புனித சென்ஜோன்ஸ் படைப்பிரிவின் கல்முனைக் கோட்டத்தின் அத்தியட்சகருமான எஸ்.ஏ.முஹம்மட் அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட சென்ஜோன்ஸ் படைப்பிரிவின் ஆணையர் கப்டன். எம்.டி.நௌசாத், டைடன் ஆசியன் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் என். கோகுலதாசன், நிறுவனத்தின் தலைவர் ஏ.ஆர்.எம்.சர்ஜூன், தலைமை நிர்வாக அதிகாரி எ.எ.எ. அப்ரி, சென்ஜோன்ஸ் படைப்பிரிவின் சம்மாந்துறைக் கோட்டத்தின் அத்தியட்சகர் எம்.ஆர்.ஹுசைன் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கப்டன். எம்.டி. நௌசாத்தினால், டைடன் ஆசியன் கல்வி நிறுவனத்தின் இளைஞர், யுவதிகளுக்கு விரிவுரைகளும் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. அவர்களுக்கு அன்று மாலை முதலுதவி சம்பந்தமான எழுத்து மூல மற்றும் செயன்முறைப் பரீட்சைகளும் படைப்பிரிவினால் நடாத்தப்பட்டன.

## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்திற்கு சான்றிதழ்

(நூருல் ஹுதா உமர்)

செறிவூட்டல் கற்றல், கற்பித்தல் மற்றும் மதிப்பீடு, ஆங்கில மொழித் திறன்களை மேம்படுத்துதலுக்கான அபிவிருத்தித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்திற்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

கல்வி அமைச்சினால் நேற்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த வரவேற்பு மண்டபத்தில் நடத்தப்பட்ட பரிசளிப்பு நிகழ்வில் வைத்து இந்தச் சான்றிதழ் கையளிக்கப்பட்டது.

இந்தச் சான்றிதழை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், கலை, கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.




பாஸில் உட்பட கல்விசார் உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொண்டனர்.






# விடுதியில் ஏற்பட்ட தீ பிரான்சில் 11 பேர் பலி!

பிரான்ஸில் விடுமுறை விடுதியொன்றில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜேர்மன் எல்லையிலிருந்து 70 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வின்ஸ்ஸென்ஹெய்ம் நகரில் நேற்று காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த விடுதிப் பகுதியே தீப்பற்றியுள்ளது.

குறித்த தீ விபத்தில் இது வரை 9 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இருவரைக் காணவில்லை எனவும் காணாமல் போனவர்களும் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (கோ)

# ஈக்வடோரில் ஜனாதிபதி வேட்பாளர் சுட்டுக்கொலை!

ஈக்வடோர் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான பெர்னாண்டோ வில்லவிசென்சியோ தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுத் திரும்பும் வழியில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தென்னமெரிக்க நாடான ஈக்வடோரில் நாடாளுமன்றம் கடந்த மே மாதம் கலைக்கப்பட்டது. இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பெர்னாண்டோ



வில்லவிசென்சியோ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

நேற்று புதன்கிழமை இரவு தலைநகர் குய்ட்டோவில் தேர்தல் பிரசாரப் பேரணியில் ஈடுபட்டுவிட்டுத் திரும்பியபோது அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அதனால், ஈக்வடோர் முழுவதும் பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது.

தேர்தலுக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில் ஜனாதிபதி வேட்பாளர் பெர்னாண்டோ வில்லவிசென்சியோ சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமை அந்நாட்டு மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (மி)

# அமெரிக்க ஜனாதிபதி பைடனை அச்சுறுத்திய நபர் சுட்டுக்கொலை!




அமெரிக்க அதிபர் ஜோ பைடன், துணைத் தலைவர் கமலா ஹாரிஸ் மற்றும் சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கு எதிராக மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படும் நபர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலையில் சால்ட் லேக் சிட்டியின் தெற்கே உள்ள ப்ரோவோவில் உள்ள ஒரு இல்லத்தில் வைத்து குறித்த நபர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சந்தேக நபரான கிரேக் ரோபர்ட்சன் என்பவர், கடந்த செப்டம்பர் மாதம் பைடன் மற்றும் ஹாரிஸுக்கு ஒன்லைனில் கொலை மிரட்டல் விடுத்ததாக புகார் அளிக்கப்பட்டது.

மேலும், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீதான குற்றவியல் விசாரணைக்கு பிராக் தலைமை தாங்கியதால், மன்ஹாட்டன் மாவட்ட வழக்கறிஞர் ஆல்வின் ப்ராக்கிற்கும், அமெரிக்க சட்ட மா அதிபர் மெரிக் கார்லேண்டிற்கும்கூட சந்தேக நபர் கொலை மிரட்டல் விடுத்ததாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மி)

# ஹவாய் தீவில் காட்டுத் தீ மீட்புப் பணிகள் தீவிரம்



அமெரிக்க மாகாணமான ஹவாய் தீவுக்கூட்டத்தில் அமைந்துள்ள மௌயி தீவில் காட்டுத் தீ வேகமாக பரவி வருகின்றது. டோரா என்ற சூறாவளி கடுமையாக வீசியதால் தீ வேகமாக பரவியுள்ளது.

ஏறக்குறைய 12,000 பேர் வசிக்கும் லஹைனா பகுதியில், வணிகக் கட்டிடங்களுக்கும் தீ பரவியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி உள்ளனர்.

அவர்களை மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க, கடலோர காவற்படையின் ஹெலிகொப்டர்கள் மற்றும் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன.

காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் பணியை தீயணைப்புப் படையினர் துரிதப்படுத்தியுள்ளனர். (மி)



# பொதுத் தேர்தலுக்காக பாகிஸ்தான் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது!

பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பின் பரிந்துரையின்படி, நாடாளுமன்றத்தைக் கலைக்க பாகிஸ்தான் ஜனாதிபதி ஆரிப் ஆல்வி உத்தரவிட்டுள்ளார். பொதுத்தேர்தலுக்கு வழிவகுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாகிஸ்தான் சட்டப்பிரிவு 58 கீழ் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதற்கான அறிவிப்பு அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதைத்தொடர்ந்து தற்போதைய அரசின் பதவிக்காலமும் முடிவுக்கு வருகின்றது.

தொகுதி மறுசீரமைப்பு போன்ற பிரச்சினைகளால் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் உள்ள நிலையில், இடைக்கால அரசை அமைக்க எதிர்க்கட்சியினருடன் ஆலோசனை நடத்திவருவதாக பதவி விலகவுள்ள ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார். (மி)

# பெயர் மாற்றம் அடைந்தது இந்தியாவின் கேரள மாநிலம்



இந்தியாவின் கேரள மாநிலத்தின் பெயர் ஆங்கிலத்தில் கேரளா என்றே அழைக்கப்படுகின்றது.

இந்தப் பெயரை 'கேரளம்' என அனைத்து அதிகாரப்பூர்வ கோப்புகளிலும் மத்திய அரசு மாற்ற வேண்டும், என்று மாநில சட்டப் பேரவையில் முதல்வர் பினராயி விஜயன் நேற்று தீர்மானம் தாக்கல் செய்துள்ளார்.

மாநிலப் பெயர் மாற்றத் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்ற நிலையில், குறித்த தீர்மானம் நேற்றே சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து, கேரளா என்ற பெயரை கேரளம் என அனைத்து அதிகாரப்பூர்வ கோப்புகளிலும் மாற்ற மத்திய அரசை வலியுறுத்தி சட்டசபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. (மி)

# வறட்சியால் 97,000த்துக்கும் அதிகமானோர் பாதிப்படைவு முதலிடத்தில் வடமாகாணம் - எச்சரிக்கும் சுகாதாரத் துறை

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 97,579 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியால் வடக்கு மாகாணமே அதிக பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நிலவும் கடும் வறட்சி காரணமாக வெவ்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக சுகாதாரப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெப்பத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு அடிக்கடி நீர் அருந்துமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் பு.விஜேசூரிய ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேலும், நாட்டில் நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலையினால் வெயிலில் தேவையின்றி நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பாக, முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரையான காலப்பகுதியில் இதை அவசியம் கவனத்தில் கொள்ளவேண்டும் எனவும் இலங்கை மருத்துவ சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

அத்தோடு, பிளாஸ்ரிக் குடிநீர்ப் போத்தல்களைப் பயன்படுத்துவது அபாயகரமானது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முக்கியமாக அதிகளவில் குளிர்பானம் அல்லது இனிப்புப் பானங்களை அருந்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என இலங்கை மருத்துவ சங்கத்தின் செயலாளர் வைத்தியர் இ.ஏ.எஸ்.டி.எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டில் நிலவும் வறட்சியுடனான காலநிலையால் யாழ்ப்பாணம், மன்னார், பதுளை, குருணாகல், புத்தளம், திருகோணமலை, இரத்தினபுரி மற்றும் முல்லைத்தீவு ஆகிய எட்டு மாவட்டங்களில் 30,155 குடும்பங்களைச் சேர்ந்த 97,579 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணமே அதிக பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. அங்கு 22,859 குடும்பங்களைச் சேர்ந்த 73,004 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் அதிக எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு 21,714 குடும்பங்களைச் சேர்ந்த 69,113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி மற்றும் சங்கானை ஆகிய பகுதிகளில் வறட்சியாலும் குடிநீரின்றியும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்துள்ளனர். சங்கானையில் 15,967 குடும்பங்களைச் சேர்ந்த 49,260 பேரும் சாவகச்சேரியில் 3,185 குடும்பங்களைச் சேர்ந்த 11,760 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலையில் 8,979 பேரும் குருணாகலில் 5,655 பேரும் இரத்தினபுரியில் 9,501 பேரும் புத்தளத்தில் 215 பேரும் மன்னாரில் 3,244 பேரும் பதுளையில் 440 பேரும் முல்லைத்தீவில் 563 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிலவும் வறட்சியால் நீர் ஆதாரங்கள் மாசடைவதால் வயிற்றுப்போக்கு உள்ளிட்ட நோய்கள் பரவும் அபாயம் காணப்படுகின்றது. கொதித்து ஆறிய நீரைப் பருகுவதன் மூலம் இந்த நோய்களைத் தவிர்க்க முடியும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

வறட்சியால் நீர் ஆதாரங்கள் வற்றிப்போயுள்ளதால் நீரில் கிருமிகள் இருக்க வாய்ப்புள்ளது. அத்தகைய நீரைப் பயன்படுத்தும்போது வயிற்றுப்போக்குப் போன்ற நோய்கள் உருவாகும் அபாயம் உள்ளது. நீங்கள் அருந்தும் குடிநீர் சுத்தமாக இல்லை என்பதில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், குறைந்தபட்சம் தண்ணீரைக் கொதிக்க வைத்து அருந்துங்கள், என அவர் தெரிவித்துள்ளார். (கோ)

# தாமரைக் கோபுரத்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் மேலும் ஒரு ஜோடி கைது!



பல எச்சரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் இருந்தபோதிலும் அதையும் மீறி, கொழும்புத் தாமரைக் கோபுரத்தில் உள்ள கண்காணிப்புத் தளத்திற்குச் சேதம் விளைவித்த இளம் ஜோடி நேற்று பிடிபட்டதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மருதானைப் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, குற்றம்ஞ்சாட்டப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டனர்.

ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திய பின்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது பரிதாபகரமானது, என தாமரைக் கோபுர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த பொதுச்சொத்தைப் பாதுகாப்பது நமது கடமையாகும். இருப்பினும், தாமரைக் கோபுரத்தின் சுவர்கள் மற்றும் இரும்பு வேலிகளைச் சேதப்படுத்தும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, என்றும் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. (மி)




# திருக்கோவிலில் இரவுத் திருவிழா





(படங்கள்: காரைதீவு நிருபர் )

எமது தேசத்துத் திருத்தலங்களின் ஒன்றான திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவத்தின் இரவுத் திருவிழா தேரோட்டத்துடன் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

# ஏற்றுமதித் தேயிலைக்கு உரிமக் கட்டணம் அறவீடு

ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையில் ஒரு கிலோ கிராமுக்கு மூன்று ரூபாவை உரிமக் கட்டணமாக அறவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுங்க ஏற்றுமதிப் பிரகடனத்தை தேயிலை ஆணையாளர் அங்கீகரிக்கும் வேளையில், இந்த உரிமக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என இலங்கைத் தேயிலை சபை அறிவுறுத்தியுள்ளது.

2023 ஆம் ஆண்டு தேயிலை ஏற்றுமதி வரி மற்றும் கட்டுப்பாட்டு ஆணையாக இந்த உரிமக் கட்டணம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, பதிவு செய்யப்பட்ட சகல தேயிலை ஏற்றுமதியாளரும் அதற்கான கட்டணத்தைச் செலுத்தவேண்டும்.

ஏற்றுமதி உத்தரவை நிறைவேற்ற முடியாத பட்சத்தில், ஏற்றுமதியாளர் ஒருவருக்கு இந்த உரிமக் கட்டணத்தைத் திரும்பப் பெறுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என இலங்கைத் தேயிலைச் சபை தெளிவுபடுத்தியுள்ளது.

தேயிலை ஏற்றுமதியில் வசூலிக்கப்படும் இந்த உரிமக் கட்டணம், தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மூலதன நிதியில் வரவு வைக்கப்படும் என தெரியவருகிறது. (மி)

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயக் கதவை உடைத்து நகை, உண்டியல் கொள்ளை

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா - சஞ்சிமலை மேல்பிரிவு தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் கதவை உடைத்து அம்மன் கழுத்தில் இருந்த ஒன்றரைப் பவுண் தாலியுடன் கூடிய மாலை மற்றும் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் என்பன நேற்று மாலை களவாடப்பட்டுள்ளன என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

முறைப்பாட்டைப் பொறுப்பேற்ற நோர்வூட் பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற தோட்டப் பகுதிக்குச் சென்று தடய வியல் பொலிஸாரை வரவழைத்து விசாரணைகளை ஆரம்பித்தபோது பணம் களவாடப்பட்ட நிலையில் வெறும் உண்டியல், கத்தி என்பன தேயிலை மலையில் இருந்து மீட்கப்பட்டன. இதேவேளை, சம்பவம் இடம் பெற்ற தோட்டப் பகுதிக்குக் ஹட்டனில் இருந்து 'பெட்டிமா' என்ற பொலிஸ் மோப்பநாய் வரவழைக்கப்பட்டு தேடு தல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது, குறித்த பொலிஸ் மோப்பநாய் உண்டியல் இருந்த தேயிலை மலையில் இருந்து நேரடியாக ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத் தின் மூலஸ்தானத்தில் சென்று அமர்ந்துகொண்டது.

அதையடுத்து சந்தேகத்தின் பேரில் ஆலயத்தின் பூசகரைக் கைதுசெய்து விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (O3)

# அட்டாளைச்சேனை முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் வழங்கல்



(எம் எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் முன்பள்ளிப் பாட சாலைகளுக்கான கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிரினால் வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் சட்டத் தரணி நகிஜா முசாபீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஜெயந்தி பரமந்தி மற்றும் ஏனைய பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.





# ஆசிரியர் அபிவிருத்தித்திட்ட மீளாய்வுக் கூட்டம் இன்று

(படங்கள் காரைதீவு சகா)

கிழக்கு மாகாணத்தில் உலக வங்கி உதவியுடன் அமுல்படுத்தும் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை அவிருத்தித் திட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

# இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி இல்லாததால் வெளிநாடு செல்ல முடியாத நிலையில் இளைஞர்கள்

இலங்கையில் எந்தவொரு கொரோனாத் தடுப் பூசியும் இல்லாதமையால் கடுமையான நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது என்று இலங்கைப் பொதுச் சுகாதாப்ர பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார். இதனால், வெளிநாடுகளுக் குச் செல்ல எதிர்பார்த்துக் காத்திருக்கும் இளைஞர்கள் தங்கள் பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடு செல்ல எதிர்பார்ப்பவர்கள் கொவிட் தடுப்பூசி செலுத்திக்கொண்டதற்கான இலத்திரனியல் சான்றிதழ்களைப் பெற வருகின்றார்கள். அவர்களில் அதிகமானோர் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களா கும்.

மேற்கத்திய நாடுகள் பல இன்னமும் தடுப்பூசி செலுத் திய சான்றிதழ்களைக் கேட்பதனால் வெளிநாடு செல்வ தில் கடுமையான சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசு அவதானம் செலுத்த வேண்டும். தற்போது மேற்கத்திய நாடுகளில் புதிய மாறுபாடுகள் அச்சுறுத்த ஆரம்பித்துள்ளன.

இலங்கையில் தடுப்பூசி இல்லாத நிலையில், இந்த மாறுபாடுகள் நாட்டுக்குள் நுழைவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன, என்றும் அவர் எச்சரித்துள்ளார். (O3)

# வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு இணைய வாக்களிப்பு முறை!

வெளிநாடுகளில் வசித்து வரும் இலங்கை மக்க ளுக்கு வாக்களிக்கும் முறைமை ஒன்றைத் தயாரிப் பது தொடர்பாக நேற்று கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் வழங்கிய பரிந்துரைகளுக்கு அமைய பொறிமுறையொன்றைத் தயாரிக்கத் தயா ராக இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

இணையத் தொழில்நுட்பத்தின் ஊடாக, வாக்களிப் பைப் பதிவு செய்யும் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதா கவும், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் இதன்னூடாக வாக்களிப்பில் பங்கேற்கமுடியும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். (கோ)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.08.2023இல் வெளியிடப்பெற்றது.